திரு. சு. ராஜேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2016–2018 ஆம் ஆண்டிற்கான மனுக்கள் குழுவின் முதலாவது மற்றும் இரண்டாவது (பதினைந்தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

8. அறிவிப்பு

சட்டமன்ற செய்தியாளர்களுக்குப் பேனா மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைச் செய்தியாளர்கள் மாட அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பெற்றுள்ள செய்தியாளர்கள் சட்டமன்றப் பேரவைச் செயலகத்தால் வழங்கப்பெறும் பேனா மற்றும் குறிப்பேடுகளை சட்டமுன்வடிவு பிரிவு–2–லிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

9. மானியக் கோரிக்கைகள், 2018–2019, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2018–2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 19–மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்,

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வான் தோன்றி, வழி தோன்றி, ஒளியும் தோன்றி, ஊன் தோன்றி, உயிர் தோன்றி, உடலும் தோன்றி, நீர் தோன்றி, நிலம் தோன்றி, நெருப்பும் தோன்றி, வளரும் இந்த உலகினில், 'தோன்றிற் புகழோடு தோன்றுக' என்னும் குறள்